**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4081/ஆ5/2024, நாள். .10.2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களது பிறந்த நாள் – இளைஞர் எழுச்சி நாள் விழா கொண்டாடுதல் – 15.10.2024 அன்று பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு மாவட்ட அளவில் கட்டுரை போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் அறிவியல் கண்காட்சி நடைபெறுதல் – மாணவர்கள் கலந்துக் கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணித் திட்டம்) செயல்முறைகள் ந.க.எண்.040011/ எம்2/ இ2/2024, நாள். 07.10.2024

•••••

பார்வையில் காணும் கடிதத்திற்கிணங்க மறைந்த முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் அவர்களது பிறந்த நாள் இளைஞர் எழுச்சி நாள் விழா கொண்டாடும் பொருட்டு அனைத்து அரசு /அரசு நிதியுதவி பெறும் நடுநிலை /உயர் / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மாவட்ட அளவில் பேச்சுப் போட்டி, கட்டுரை போட்டி மற்றும் அறிவியல் கண்காட்சி கீழ்காணும் படி நடைபெறவுள்ளது.

**நாள்– 15.10.2024 (செவ்வாய்கிழமை)**

**நேரம் – காலை 9.30 மணி**

**இடம் – அரசு (முஸ்லீம்) மேல்நிலைப் பள்ளி, வேலூர்.**

1. **அறிவியல் கண்காட்சி – ஒரு பள்ளிக்கு ஒரு மாணாக்கர் வீதம் பங்கு பெற வேண்டும்**
2. **பேச்சுப் போட்டி – ஒரு பள்ளிக்கு ஒரு மாணாக்கர் வீதம் பங்கு பெற வேண்டும்**
3. **கட்டுரை போட்டி – ஒரு பள்ளிக்கு ஒரு மாணாக்கர் வீதம் பங்கு பெற வேண்டும்.**

**<u>பேச்சுப் போட்டி தலைப்பு –</u>**

**1. டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் கண்ட கனவின் இன்றைய நிலை**

**2.இளைஞர்களின் எழுச்சியும் இந்தியாவின் வளர்ச்சியும்.**

**<u>கட்டுரைப் போட்டி தலைப்பு –</u>**

**1. கல்வி பற்றிய டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் பார்வை**

**2.நான் விரும்பும் தலைவர் அப்துல் கலாம்**

எனவே மேற்கண்ட போட்டிகளில் மாணாக்கர்கள் கலந்து கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(NSS தன்னார்வளர்களைக் கொண்டு பாதுகாப்பாக இளைஞர் எழுச்சி பேரணி நடத்தி b5secceovellore@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு புகைப்படம் அனுப்புமாறு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.)

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி /தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அனைத்து வகை / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்.
   வேலூர் மாவட்டம்.

நகல்.

1. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்
   (நாட்டு நலப்பணித் திட்டம்) அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. தலைமையாசிரியர்,
   அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, வேலூர்
   (போட்டிகள் நடைபெறுவதற்கு போதிய வசதி செய்து தருமாறு
   கேட்டுக்கொள்ளப்படுகிறார். )